<u>ஜோலார்பேட்டை நகராட்சி</u>

<u>சாதாரண கூட்டம்</u>

2020ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26.08.2020ம் நாள் புன்கிழமை காலை 11.00 மணிக்கு ஜோலார்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் தனிஅலுவலர் அவர்களால் நடத்தப்பட உள்ள சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

தனி அலுவலர்

**<u>பொருள் எண்.1</u>**

ஜோலார்பேட்டை நகராட்சி பகுதிகளில் கொரானோ நோய் தொற்று (கோவிட்–19) மிக வேகமாக சமூக பரவலாக பரவி வருகிறது. கொரானோ நோய் தொற்றினை கட்டுப்பட்டுத்த நகராட்சியால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது கொரானோ நோய் தொற்று உறுதி செய்யப்படும் பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு நோய் தொற்று பரவாமல் தடுக்கவும், பொதுமக்களின் நலன் கருதியும் சவுக்கு மரம் மற்றும் இரும்பிலான தகரம் (G.I Sheet) கொண்டு தடுப்பு (Barry Guard) பணிகள் பாதிக்கப்பட்ட பகுதி, பாதிக்கப்பட்ட வீடு மற்றும் அப்பகுதியில் உள்ள தெருக்களில் அவ்வப்போது பாதிப்பு ஏற்படும் நாட்களில் தடுப்புவேலி அமைக்க தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேலும் பணியின் அவசர அவசியம் கருதி தனி தடுப்பு பணிகளை மேற்கொள்ள 05.06.2020 அன்று உள்ளூர் விலைப்புள்ளி பெறப்பட்டது. அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு,

| வ.எண் | பணியின் விவரம் | ஸ்ரீ முருகன் சவுண்ட் சிஸ்டம் ஜோலார்பேட்டை | ஸ்ரீ அம்மன் சவுண்ட் சிஸ்டம் திருப்பத்தூர் | கவிதா சவுண்ட் சிஸ்டம் தாமலேரிமுத்தூர் |
|---|---|---|---|---|
| 1 | சவுக்கு மரம் (சவுக்கு மரம் ஏற்றி கொண்டு வந்து மரம் கட்டுதல், ஆட்கள் கூலி, வண்டி வாடகை மற்றும் 14 நாட்கள் முடிந்த பிறகு திரும்ப ஏற்றி செல்லுதல் கூலி உட்பட) **/ ஒரு மீட்டருக்கு** | 265.00 | 145.00 | 285.00 |
| 2 | இரும்பிலான தகரம் (G.I Sheet) (இரும்பிலான தகரம் ஏற்றி கொண்டு வந்து தகரம் கட்டுதல், ஆட்கள் கூலி, வண்டி வாடகை மற்றும் 14 நாட்கள் முடிந்த பிறகு திரும்ப ஏற்றி செல்லுதல் கூலி உட்பட) **/ ஒரு சதுர மீட்டருக்கு** | 385.00 | 250.00 | 410.00 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s. ஸ்ரீ அம்மன் சவுண்ட் சிஸ்டம் திருப்பத்தூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதிப் பெற்று பணி உத்திரவு வழஙகியமைக்கும் மன்றத்தின் பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. இப்ணிக்கு ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழஙகலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழஙகியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. இச்செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்: 277/2020/இ1

**பொருள் எண்.2**

ஜோலார்பேட்டை நகராட்சி பகுதிகளில் கொரானோ நோய் தொற்று (கோவிட்–19) மிக வேகமாக சமூக பரவலாக பரவி வரும் சூழ்நிலையில் நோய் தொற்றினை கட்டுப்பட்டுத்தவும், நோய் தொற்றினை உடனுக்குடன் பரிசோதனை செய்து கண்டறியவும், மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் கோடியூர் சமூதாய சுகாதார மையத்தில் (Community Health Centre) கொரானா பரிசோதனை செய்யும் பெட்டி (COVID WISK Box) அமைக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பத்தூர் அவர்கள் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தியதின் படி பொதுமக்களின் நலன் கருதியும், பணியின் அவசர அவசியம் கருதி பரிசோதனை பெட்டி செய்யும் பணியினை மேற்கொள்ள 17.06.2020 அன்று உள்ளூர் விலைப்புள்ளி பெறப்பட்டது. அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு,

| வ.எண் | பணியின் விவரம் | Ravi, Aluminium works - திருப்பத்தூர். | R.K. Aluminium channel works - ஜோலார்பேட்டை. | சுகு, அலுமினியம் ஒர்க்ஸ், வாணியம்பாடி. |
|---|---|---|---|---|
| 1 | ஜோலார்பேட்டை நகராட்சி கோடியூர் சமூதாய சுகாதார மையத்திற்கு (CHC) கொரானா பரிசோதனை செய்யும் பெட்டி (COVID WISK Box) அமைத்தல். (அலுமினியம் பெட்டியின் சுற்றளவு 4.00 மீ x 2.20 மீ உயரம், Plug point 4Nos , Exhaust Fan 1No, Plug point 1No, மின்விளக்கு 1 No, Wall mountain fan 1No). | **49,950.00** | **48,400.00** | **50,200.00** |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s. R.K. Aluminium channel works - ஜோலார்பேட்டை நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதிப் பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றத்தின் பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று M/s. R.K.Aluminium Channel Works - ஜோலார்பேட்டை நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழஙகியதை மன்றம் அஙகீகரிக்கலாம்.
2. இச்செலவினத்தை மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பத்தூர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட மாநில பேரிடர் மேலாண்மை நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்: 277/2020/இ1

**பொருள் எண்.3**

ஜோலார்பேட்டை நகராட்சி பொட்டிக்கான் பள்ளம் உரக்கிடங்கில் தூய்மை இந்தியா திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நுண்உயிர் உரம் தயாரிக்கும் மையம் அமைத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் நகரில் உள்ள வீடுகளில் நாள்தோறும் சேகரிக்கப்படும் மட்கும் குப்பைகளிலிருந்து தயாரிக்கப்படும் நுண்ணுயிர் உரத்தினை பிரித்தெடுக்க சல்லடை இயந்திரம் (Vibrator Segregator with Seiver Machine) தேவைப்பபடுகிறது. எனவே மேற்கண்ட Vibrator Segregator with Seiver Machine சப்ளை பெற்று பொருத்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1.10 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் நிர்வாக அனுமதி வழஙகலாம்.
2. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 550/2020/E1

**பொருள் எண்.4**

ஜோலார்பேட்டை நகராட்சி பொட்டிக்கான் பள்ளம் உரக்கிடங்கில் தூய்மை இந்தியா திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பழைய குப்பைகளை பிரித்தெடுக்கும் (பையோ மைனிங) பணிகள் நடைப்பெற்று வருகிறது. அதிலிருந்து வரும் பிளாஸ்டிக் கழிவுகளை வெப்ப சிதைவு ஆலை (Pyrolysis plant) மூலம் எரித்து அதிலிருந்து பைரோ ஆயில் தயாரிக்கும் இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வெப்ப சிதைவு ஆலையில் நேரடியாக பிளாஸ்டிக் கழிவுகள் அனுப்புவதால் ஆயில் வெளியேற்றம் குறைவாக உள்ளது. இதனால் தினந்தோறும் பிரித்துதெடுக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் அதிகரிப்பதுடன் நேரம் வீணாவதை கருத்தில் கொண்டு Aglomerator இயந்திரம் மூலம் பிளாஸ்டிக்குகளை அரைத்து வெப்ப சிதைவு ஆலையில் அனுப்பும் போது ஒரு மணி நேரத்திற்கு 150 முதல் 200 கிலோ பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றி அதிலிருந்து ஆயில் தயாரிப்பினை அதிகரிக்க ஏதுவாக இருக்கும். எனவே Aglomerator இயந்திரம் சப்ளை பெற்று பொருத்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4.95 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் நிர்வாக அனுமதி வழஙகலாம்.
2. இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 550/2020/E1

**பொருள் எண்.5**

ஜோலார்பேட்டை நகராட்சி வார்டு எண்.03 இரயில்வே குடியிருப்பு பகுதிக்கு அருகாமையில் உள்ள அனுமந்த கவுண்டர் தெருவிலிருந்து வரும் கழிவுநீர் செல்ல வழியில்லாமல் தேஙகுகிறது. இதனால் நோய் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே பொதுமக்களின் நலன் கருதி அப்பகுதியின் அருகாமையில் உள்ள இரயில்வே குடியிருப்பு விளையாட்டு திடலின் கிழக்குபுறம் உள்ள குடியிருப்பு கால்வாயுடன் இணைத்து புதியதாக கால்வாய் அமைக்க தாயரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் நிர்வாக அனுமதி வழஙகலாம்.
2. இச்செலவினத்தை பொது நிதி இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்:636/2020/E1

## பொருள் எண்.6

ஜோலார்பேட்டை நகராட்சியில் தணிக்கை கட்டணம் 2018-2019-ம் ஆண்டிற்கான தொகை ரூ.63,911/-ஐ உரிய அரசு தலைப்பில் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் எண்.7

ஜோலார்பேட்டை நகராட்சியின் பொதுசுகதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் கீழ்கண்ட வாகனஙகளுக்கு **2020–2021**ம் ஆண்டிற்கான காப்பீடு புதுப்பிக்க வேண்டியுள்ளது. காப்பீட்டிற்கு ஆகும் செலவினம் தொகை ரூ.1,51,310/-க்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வாகனத்தின் விவரம் | வாகன எண். | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | டீப்பர் லாரி (சுவராஜ் மஸ்தா) | TN23 AT 1076 | 31,065/- |
| 2 | டம்பர் பிளேசர் | TN23 BR 8739 | 35,514/- |
| 3 | டிராக்டர் | TN23 AY 6679 | 18,316/- |
| 4 | டிரைலர் | TN23 AY 6680 | 2,674/- |
| 5 | டாடா ஏஸ் | TN23 BL 0870 | 19,259/- |
| 6 | டாடா ஏஸ் | TN83 B 0657 | 22,241/- |
| 7 | டாடா ஏஸ் | TN83 B 0604 | 22,241/- |
| | | மொத்தம் தொகை ரூ. | 1,51,310/- |

அலுவலக குறிப்பு

1. மன்றம் நிர்வாகஅனுமதி வழஙகலாம்.
2. வருவாய் நிதியிலிருந்து இச்செலவினத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.650/2016/எச்1

## பொருள் எண்.8

ஜோலார்பேட்டை நகராட்சியில் தூய்மை இந்தியா திடக்கழிவு மேலாண்மை 2018–2019ம் ஆண்டிற்கான திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு 13 எண்கள் Battery Operated Vehicle வாங்குவதற்கு மதிப்பீடு ரூ.23.40 இலட்சத்திற்கு 21.01.2019ல் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 15.02.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி முடிக்கப்பட்டடு ரூ.20.99 இலட்சம் பட்டியல் தொகை வழகப்பட்டது. இத்திட்டத்தில் மீதமுள்ள 2.41 இலட்சத்திற்கு கூடுதலாக இரண்டு எண்கள் BOV வாங்க நகரமன்ற தீர்மானம் எண்.389 நாள்.20.11.2019ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு 25.11.20219ல் கடிதம் அனுப்பப்பட்டது.

இதனையடுத்து மேலும் கூடுதலாக இரண்டு எண்கள் BOV வாங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1191/2019/P3 நாள்.07.02.2020ல் அனுமதி அளிக்கப்பட்டு உத்திரவிடப்பட்டது. அதனடிப்படையில் கூடுதலாக இரண்டு எண்கள் BOV வாங்க மதிப்பீடு ரூ.3.60 இலட்சத்திற்கு 28.07.2020 அன்று மறு ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து கீழ்கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | ஜோலார்பேட்டை நகராட்சிக்கு Battery Operated Vehicle-2 Nos சப்ளை செய்தல். | 3.60 | M/s.Realtech systems, Perundurai 0.19% மதிப்பீட்டை விட அதிகம் | M/s.Softbery Solution - Karaikudi 0.08% மதிப்பீட்டைவிட குறைவு |

அலுவலக குறிப்பு

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழுங்கிய M/s.Softbery Solution – Karaikudi (0.08% ) ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழுங்கலாம்.
2. இப்பணிக்கு கூடுதலாகும் செலவினம் ரூ.1.19 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழுங்கலாம்.

ந.க.எண்.511/2018/இ1.

## பொருள் எண்.9

ஜோலார்பேட்டை நகராட்சி வார்டு எண்.01 முதல் 18 வரை பகுதிகளில் தெரு உள்ள மின்விளக்குகள் சுமார் 1615 எண்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த தெருவிளக்குகளில் தினந்தோறும் ஏற்படும் பழுதுகளை சரிசெய்து பராமரிக்க (2020–2021) ஆம் ஆண்டிற்கு தெருவிளக்கு உதிரிபாகங்கள் வாங்க தாயரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. இச்செலவினத்தை பொது நிதி இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: /2020/E1

**பொருள் எண்.10**

ஜோலார்பேட்டை நகராட்சி பகுதிகளில் உள்ள சிறுமின் விசைபம்புகள் மற்றும் கைப்பம்புகளில் ஏற்படும் பழுதினை சரி செய்து 2020-21ம் ஆண்டிற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
2. இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்: 633/2020/இ1

**பொருள் எண்.11**

ஜோலார்பேட்டை நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழவு மேலாண்மை பணிகள் பேற்கொள்ள 15 எண்கள் மின்கலன் மூலம் இயஙகும் வாகன்ஙகள் வாஙகப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. தற்போது திடக்கழிவு மேலாண்மை பணிகள் தஙகுதடையின்றி தினமும் பணிகள் நடைபெற வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு மேற்கண்ட வாகனஙகளை பராமரிப்பு செய்யவும், பணியின் அத்தியாவசியம் கருதியும் வருடாந்திர பராமரிப்பு (AMC) பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் நிர்வாக அனுமதி வழஙகலாம்.
2. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்: 634/2020/இ1

**பொருள் எண்.12**

ஜோலார்பேட்டை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொட்டிக்கான் பள்ளம் உரக்கிடஙகில் 40 வருடஙகளுக்கு முன்பு பேரூராட்சியாக இருந்த காலத்திலிருந்து தேஙகி உள்ள மட்கும் மற்றும் மட்காத குப்பைகளை தற்போது தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பழைய குப்பைகளை பிரித்தெடுக்கும் (பையோ மைனிங) பணிகள் நடைப்பெற்று வருகிறது. அதிலிருந்து வரும் பிளாஸ்டிக் கழிவுகளை Pyrolysis plant மூலம் எரித்து பிளாஸ்டிக்கள் அகற்றப்பட்டு அதிலிருந்து பைரோ ஆயில் தயாரிக்கும் இயந்திரம் அமைக்கப்பட்டு இயஙகி வருகிறது. இதனை பராமரிக்கும் பொருட்டு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள பணியின் அத்தியாவசியம் கருதி வருடாந்திர பராமரிப்பு பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் நிர்வாக அனுமதி வழஙகலாம்
2. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்: 635/2020/இ1

## பொருள் எண்.13

ஜோலார்பேட்டை நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 18 வரை உள்ள பகுதிகளில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர நோய் தொற்றுகள் வராமல் தடுக்க மகளிர் சுய உதவி குழு மூலமாக 20 பணியாளர்களை கொண்டு DBC பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ஒ.மு.எண்.13433/2018/ஜே1 நாள்:17.09.2018ல் டெங்கு மற்றும் இதர நோய்கள் பரவுவதை தடுக்கும் பொருட்டு கொசுபுழு ஒழிப்பு பணியாளர்களை (DBC Workers) ஒப்பந்த அடிப்படையில் Out sourcing முறையில் அந்தந்த நகராட்சிகளின் நிர்வாக அனுமதி வரம்புக்குள் உட்பட்டு பணியமர்த்தி கொள்ள அனுமதி வழஙகப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சியில் 300 குடியிருப்புகளுக்கு ஒரு நபர் என்ற விகிதத்தல் 8150 குடியிருப்புகளுக்கு 27 பணியாளர்கள் தேவைப்படுவதால் இப்பணியினை ஒப்பந்த அடிப்படையில் Out sourcing முறையில் மேற்கொள்ள 27 பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்தப்புள்ளி பெற்று பணி அமர்த்திகொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

மேலும் இப்பணியினை மெற்கொள்ளும் பணியாளர்களுக்கான தினகூலி வருடம் தோரும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்யும் ஆண்டு விலை வீதம் மற்றும் EPF, ESI ஆகியவற்றின் அடிப்படையில் நிர்ணயம் செய்யவும் வருடம் தோரும் புதுப்பித்துக்கொள்ளவும், இப்பணிக்குண்டான தோராய செலவினம் ரூ.30.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் நிர்வாக அனுமதி வழஙகலாம்.
2. இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்.907/2018/எச்1

## பொருள் எண்.14

ஜோலார்பேட்டை நகராட்சியில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கையாக நகராட்சி பகுதிகளில் கிருமிநாசினி தெளிக்கும் பணிகள் நகராட்சி பணியாளர்களை கொண்டு அனைத்து வார்டுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளின் போது அத்தியாவசிய தளவாட பொருளான கீழ்கண்ட விவரப்படி தேவைப்படுகிறது. ஏற்கெனவே இப்பணியினை மேற்கொண்ட M/s. திருப்பத்தூர் அக்ரோ இன்ஜினியரிங் சர்விஸ் & கோ அப்ரேட்டிவ் சென்டர் லிமிடேட், திருப்பத்தூர் அவர்களிடமிருந்து வாங்கவும், இதற்கான தோராய செலவினம் மற்றும் இதர செலவினங்களுக்கான தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருட்களின் விவரம் | அளவு/எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 1% ஐபோ குளோரைடு (Hypochlorite) | 3000 லிட்டர்கள் |

அலுவலக குறிப்பு

1. செலவினங்களுக்கான தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணிமேற்கொண்டதற்கு மன்றம் பின் ஏற்பு வழங்கலாம்.

ந.க.எண்: 277/2020/எச்1

**<u>பொருள் எண்.15</u>**

அரசாணை (நிலை) எண்.319 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ1) நாள்.31.12.2010ல் வேலூர் மாநகராட்சி, 11 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 944 ஊரக குடியிருப்புகளுக்கு 215 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் வேலூர் கூட்டு குடிநீர் திட்டம் ரூ.1295.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்திட அரசாணை வெளியிடப்பட்டது.

இக்கூட்டுக் குடிநீர் திட்டத்தில் ஜோலார்பேட்டை நகராட்சிக்கு 17.76 கோடியில் பணிகள் முடிக்கப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ளது. இந்நிலையில் தென்னக இரயில்வே முதுநிலை பகுதி பொறியாளர் (பணிகள்), ஜோலார்பேட்டை பிரிவு அவர்களின் கடித ந.க.எண்.No.agt/works/1256 நாள்.27.03.2020 தேதிய கடிதத்தில் இரயில்வே குடியிருப்பு மற்றும் இரயில் நிலையம் மற்றும் பணிமனைகளுக்கு குடிநீர் வேண்டி கடிதம் வரப்பெற்றது. இதனையடுத்து இவ்வலுவலக நகரமன்ற தீர்மானம் எண்.14 நாள்.17.04.2020ல் 1000 லிட்டருக்கு ரூ.80.00 என்ற விலை விகிதத்தில் வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனையடுத்து இந்நிலையில் தென்னக இரயில்வேயின் 18.05.2020 தேதிய கடிதத்தில் நாள் ஒன்றுக்கு 2.00 இலட்சம் லிட்டர் குடிநீர் புதியதாக பைப்லைன் அமைத்து குடிநீர் வழங்க வேண்டி கடிதம் வரப்பெற்றது. தற்போது நகராட்சிக்கு பெறப்படும் குடிநீரிலிருந்து மேற்படி இரயில்வே துறைக்கு நாள் ஒன்றுக்கு 50000 லிட்டர் மட்டுமே வழங்க இயலும். மேலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் நகராட்சிக்கு கூடுதல் அளவு குடிநீர் வேண்டி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. கூடுதல் குடிநீர் வழங்கப்படும் பட்சத்தில் இரயில்வே துறை கோரிய அளவான நாள் ஒன்றுக்கு 2.00 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க இயலும். எனவே அதனடிப்படையில் ஆய்வு மேற்கொண்டு புதியதாக DI பைப்லைன் அமைத்து குடிநீர் வழங்க ரூ.6.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்து இரயில்வே துறைக்கு அனுப்பப்பட்டது.

தற்போது இரயில்வே துறையிடமிருந்து மேற்கண்ட பணிக்கான தொகை ரூ.6.00 இலட்சத்தினை மின்னனு பரிவர்த்தனை (ECS) மூலம் நகராட்சி குடிநீர் நிதிக்கு வரவாக்கப்பட்ள்ளது. எனவே இரயில்வே துறைக்கு குடிநீர் வழங்க நகராட்சி குடிநீர் குழாயிலிருந்து இரயில்வே துறைக்கு சொந்தமான தரைமட்ட நீர்தேக்க தொட்டி வரை புதியதாக DI குடிநீர் குழாய் ரூ.6.00 மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரவும், குடிநீர் வழங்கவும் நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. இச்செலவினத்தினை இரயில்வே துறையிடமிருந்து பெறப்பட்ட ரூ.6.00 இலட்சத்தினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.320/2020/இ1

# ஜோலார்பேட்டை நகராட்சி
## சாதாரண கூட்டம்

**2020**ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் **26.08.2020**ம் நாள் புன்கிழமை காலை **11.00** மணிக்கு ஜோலார்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் தனிஅலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட சாதாரண கூட்ட தீர்மானங்கள்

| வ.எண் | பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 60 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 2 | 2 | 61 | அனுமதி அளிக்கப்பட்டது |
| 3 | 3 | 62 | அனுமதி அளிக்கப்பட்டது |
| 4 | 4 | 63 | அனுமதி அளிக்கப்பட்டது |
| 5 | 5 | 64 | அனுமதி அளிக்கப்பட்டது |
| 6 | 6 | 65 | அனுமதி அளிக்கப்பட்டது |
| 7 | 7 | 66 | அனுமதி அளிக்கப்பட்டது |
| 8 | 8 | 67 | அனுமதி அளிக்கப்பட்டது |
| 9 | 9 | 68 | அனுமதி அளிக்கப்பட்டது |
| 10 | 6 | 69 | அனுமதி அளிக்கப்பட்டது |
| 11 | 11 | 70 | அனுமதி அளிக்கப்பட்டது |
| 12 | 12 | 71 | அனுமதி அளிக்கப்பட்டது |
| 13 | 13 | 72 | அனுமதி அளிக்கப்பட்டது |
| 14 | 14 | 73 | அனுமதி அளிக்கப்பட்டது |
| 15 | 15 | 74 | அனுமதி அளிக்கப்பட்டது |

தனி அலுவலர்
ஜோலார்பேட்டை நகராட்சி